www.Padasalai.Net www.CBSEtips.in

H

தூத்துக்குடி மாவட்டம்

# முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023

## எட்டாம் வகுப்பு

பதிவு எண்:

நேரம்: 1.30 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்: 50

### பகுதி - 1

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 7×1=7

1. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ................
   அ) தந்தை பெரியார் ஆ) பெருஞ்சித்திரனார்
   இ) பாரதிதாசன் ஈ) வ.உ.சிதம்பரனார்
2. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ..............
   அ) கடல் ஆ) வைப்பு இ) பரவை ஈ) ஆழி
3. நமக்குக் கிடைத்துள்ள மிகப்பழமையான இலக்கணநூல் ..............
   அ) அகத்தியம் ஆ) நன்னூல்
   இ) தொல்காப்பியம் ஈ) யாப்பருங்கலக்காரிகை
4. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ...............
   அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு
5. செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது
   அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு
6. 'விழுந்ததங்கே' என்ற சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ...............
   அ) விழுந்த + அங்கே ஆ) விழுந்த + ஆங்கே
   இ) விழுந்தது + அங்கே ஈ) விழுந்தது + ஆங்கே
7. 'வருமுன்னர்' எனத்தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி ...............
   அ) எடுத்துக்காட்டு உவமையணி ஆ) தற்குறிப்பேற்ற அணி
   இ) உவமையணி ஈ) உருவக அணி

### பகுதி - 2

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**(12 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)** 3×2=6

8. தமிழ் எவற்றைஅறிந்து வளர்கிறது?
9. ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?
10. கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?
11. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?
12. "தக்கார்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பகுதி - 3

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:** 5×2=10

13. *சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக:*
    அ) சோறு ............... (சாப்பிடு, உண்) ஆ) பால் ............... (பருகு, குடி)
14. *ஒருசொல் ஒரே தொடரில் பலபொருள் தருமாறு எழுதுக.*
    அ) திங்கள் ஆ) அணி
15. *தொடரின் வகையைக் கண்டறிந்து எழுதுக.*
    அ) கடமையைச் செய் ...............
    ஆ) நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்? ...............
16. *கலைச்சொல் தருக :*
    அ) Plain ஆ) Epigraph
17. *பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக:*
    அ) கல் ஆ) கிழமை

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



18. *அரபு எண்களுக்குரிய தமிழெண்களை எழுதுக:*
அ) உலக ஈர நிலநாள் பிப்ரவரி 2 ................
ஆ) கல்வி வளர்ச்சி நாள் ஜூலை 15 ...............
19. *தொடர்களை மாற்றுக:*
அ) நேற்று நம் ஊரில் மழை பெய்தது. *(வினாத் தொடராக மாற்றுக)*
ஆ) அந்தோ ! பூனையின் காலில் அடிபட்டுவிட்டதே! *(செய்தித் தொடராக மாற்றுக)*

## பகுதி - 4

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**
**(22 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)** 3×3=9

20. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
21. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?
22. வாழ்க நிரந்தரம் ................ இசை கொண்டு வாழியவே என்னும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடல்.
23. *கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:*
எட்டத்தில் போகிற ஒருவனை ஏய் என அழைத்தனர். ஏய் என்பது என்னோடு பொருந்து, சேர் என்னும் பொருளை உடையது. ஏய் என்பது ஏ என வழக்கில் ஊன்றிவிட்டது. ஏவுதல் என்பது "அம்பு விடுதல்" அம்பு விரைந்து செல்வது போலச் சென்று உரிய கடமை புரிபவன் ஏவலன் எனப்பட்டான். அதில் வல்லவனை ஏகலைவன் என்று பாராட்டியது.
வினாக்கள்:
1. எட்டத்தில் போகிறவனை எவ்வாறு அழைத்தனர்?
2. 'ஏவுதல்' என்பதன் பொருள் யாது?
3. ஏவலன் என்பவன் யார்?

## பகுதி - 5

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:** 2×5=10

24. விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.
25. ஓரெழுத்து ஒருமொழிகள் இடம் பெறுமாறு ஐந்து தொடர்கள் எழுதுக.
26. படங்களுக்குப் பொருத்தமான திருக்குறள்களை எழுதுக:





## பகுதி - 6

**ஏதேனும் ஒன்றினுக்கு விரிவான விடை தருக:** 1×8=8

27. எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக. (அல்லது)
28. தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

---------

Kindly send me your study materials to padasalai.net@gmail.com